# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1945/6 - 2015 දෙසැම්බර් මස 14 වැනි සඳුදා - 2015.12.14

*1945/6 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012* (II)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ, 14ஔ, 14க மற்றும் 14 (ங) என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61(1) (ந) என்னும் பிரிவின் கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2015, நவெம்பர் 30.*

**ஒழுங்குவிதிகள்**

*2014 ஆம் ஆண்டின் செத்தெம்பர் 1 ஆந் திகதிய 1878/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஆழ்கடல் மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*

(1) அவ்வொழுங்குவிதியின் 4 ஆம் ஒழுங்குவிதியில் -

(i) அதன் (vi) ஆம் விடயத்தில் "கடற்பறவைகள் போன்ற தடைசெய்யப்பட்ட இனங்களையும் மற்றும் பரிசோதனைக்கு விடப்பட்ட இனங்களையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கடற்பறவைகள் போன்ற தடைசெய்யப்பட்ட இனங்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அதன் (xi) ஆம் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"(xi) ஆம் உரிமம் ஒன்றின் கீழ் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட எவையேனும் சுறாமீன் இனங்களின் துடுப்பானது அத்தகைய சுறாமீனின் உடலில் இயற்கையாக இணைக்கப்பட்டிருந்தாலன்றி கப்பலில் வைக்கப்பட்டிருத்தலாகாது." ;

(iii) அதன் (xii) ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(xiii) HF/MF (SSB) வானொலித் தொடர்பாடல் அலகுடன் சேர்த்து VH F வானொலி நிறுவுகையானது 2009 ஆம் ஆண்டின் மே 05 ஆந் திகதிய 1600/13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டின் மீன்பிடி வள்ளங்களின் பாதுகாப்பு (வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் உபகரணங்கள்) ஒழுங்குவிதிகளின் 162 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கப் பொருத்தப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும். தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சர்வதேச வானொலி அழைப்புச் சைகைகள் இதற்கான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்டவாறு வள்ளத்தின் இரண்டு பக்கங்களின் மீதும் தெளிவாக அடையாளமிடப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் இப்பந்தியின் ஏற்பாடுகள் இருபத்திநான்கு மீற்றர் நீளத்தைவிட அதிகமான நீளத்தைக் கொண்டிருக்கின்ற படகிற்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

"(xiv) தீயணைப்புக் கருவிகளானவை 2009 ஆம் ஆண்டின் மீன்பிடி வள்ளங்களின் பாதுகாப்பு (வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் உபகரணங்கள்) ஒழுங்குவிதிகளின் 105, 106 மற்றும் 107 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க படகில் கொண்டு செல்லப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் இப்பந்தியின் ஏற்பாடுகள் இருபத்திநான்கு மீற்றர் நீளத்தைவிட அதிகமான நீளத்தைக் கொண்டிருக்கின்ற படகிற்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

(xv) அதிகாரமளிக்கப்படாத மீன்பிடி உபகரணங்கள் படகில் கொண்டு செல்லப்படுதல் ஆகாது.

(xvi) கப்பற்றொகுதியினரின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையான உயிர்க்காப்பு மேலங்கிகள் 2008 ஆம் ஆண்டின் ஒற்றோபர் 09 ஆந் திகதிய 1570/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் உள்ளூர் மீன்பிடி படகுகள் (உயிர்க்காப்பு மேலங்கிகள்) ஒழுங்குவிதிகளிற்கிணங்க படகில் களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவை அவசர நிலைமையின் போது படகில் சேவையாற்றும் உறுப்பினர்களினால் அணியப்படுதல் வேண்டும்.

(xvii) 2015 ஆம் ஆண்டின் மாச்சு 03 ஆந் திகதிய 1904/10 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மீன்பிடி உபகரணங்களுக்கு அடையாமிடுதல் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க மீன்பிடி உபகரணங்கள் அடையாளமிடப்படுதல் வேண்டும்.

(xviii) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செய்மதி அடிப்படையிலான படகு கண்காணிக்கும் உபகரணம், 2015 ஆம் ஆண்டின் மாச்சு 26 ஆந் திகதிய 1907/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் ஆழ்கடலில் செயற்படும் மீன்பிடிப் படகுகளுக்கான செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமையை (ககமு) நடைமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகளிற்கிணங்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்திலுள்ள நிலத்தை அடிப்படையாகக் கொண்ட கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்துடன் இணைப்பை ஏற்படுத்துவதற்கென படகில் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(xix) நீள் தூண்டில் வலைகள் மற்றும் சுருக்குவலைகள் என்பனவற்றால் முறையே பிடிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட மீன் இனங்கள் மற்றும் நீர்வாழ் உயிரின விலங்குகள் என்பவற்றை விடுவிப்பதற்காக தூண்டில்களை கழற்றுதல், தூண்டில் வெட்டுதல் ஆகிய கருவிகள், அத்தாங்கு மற்றும் பை வலை என்பனவற்றை படகில் கொண்டு செல்லுதல் வேண்டும்.

(xx) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் விஞ்ஞான முறையான அவதானிப்பாளர் ஒருவர் இருபத்திநான்கு மீற்றர் நீளத்திற்கு மேலான நீளத்தைக் கொண்ட ஒவ்வொரு படகிற்கும் தொழிலுக்கு அமர்த்தப்படுதல் வேண்டும் என்பதுடன், படகின் உரிமையாளர் மீன்பிடித் தொழிற்பாட்டைப் பூர்த்தி செய்யும் வரை படகுத் தலைவருக்கு வழங்கப்பட்ட வசதிகள் போன்றவற்றை ஒத்த, அவதானிப்பாளரால் தேவைப்படுத்தப்பட்ட வசதிகள் முக்கியமாக வழங்குதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய படகுகளில் கிடைக்கக்கூடிய வசதிகளின் வகையைக் கவனத்திற்கொண்டு இருபத்திநான்கு மீற்றருக்கு குறைவான நீளத்தைக் கொண்ட ஏதேனும் படகிற்கு விஞ்ஞான முறையான அவதானிப்பாளர் ஒருவரை தொழிலுக்கு அமர்த்தலாம்."

*(2) அவ்வொழுங்குவிதியின் 5 ஆம் ஒழுங்குவிதியினை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியினைச் சேர்ப்பதன் மூலமும் :-*

*"5அ. ஆழ்கடலில் தொழிற்படுகின்ற ஆள் எவரும் பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி கடலில் அல்லது ஏதேனும் துறைமுகத்தில் வேறு ஏதேனும் படகிற்கு மீன்களை மாற்றுதல் ஆகாது."* ;

*(3) 6 ஆம் ஒழுங்குவிதியில் "உரிமம் வைத்திருப்பவர்" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் சொற்றொடர்களைச் சேர்ப்பதன் மூலமும் :-*

*" விஞ்ஞான முறையான அவதானிப்பாளர்" என்பது இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழுவின் (IOTC) 11/04 ஆம் இலக்க, தீர்மானத்திற்கிணங்க விஞ்ஞான முறையான தரவு சேகரித்தல் தொடர்பில் விசேட பயிற்சியைப் பெற்றுள்ளவரும், அந்நோக்கத்திற்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டவரும் மற்றும் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்துடன் அல்லது ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்புடன் பதிவு செய்யப்பட்டவருமான ஆளொருவர் என்று பொருள்படும் ;*

*''அதிகாரமளிக்கப்படாத மீன்பிடி உபகரணம்'' என்பது, இவ்வொழுங்குவிதியின் கீழ்ப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அனுமதிக்கப்படாதிருக்கின்றதான ஏதேனும் மீன்பிடி உபகரணம் என்று பொருள்படும்.*

*(4) அதன் அட்டவணையை IV இனை உடனடுத்துப் பின்வரும் அட்டவணை V இனைச் சேர்ப்பதன் மூலமும் :-*

**"அட்டவணை V**

*கீழே தரப்பட்டவாறு வெளிக்காட்டப்பட்ட சர்வதேச வானொலி அழைப்புச் சைகை (ICRS).*

*உதாரணம் :*

**4SF 2514**

*எழுத்துக்களின் இலக்கங்களின் அளவுக்குறிப்பீடுகள் (அளவு) - வள்ளத்தை அடையாளமிடுவதற்கும் இனம் காண்பதற்குமான FAO நியம அளவைக் குறிப்பீடுகள்.*

| *வள்ளத்தின் ஒட்டுமொத்த நீளம் ( LOA) மீற்றர்களில்* | *எழுத்துக்களினதும் இலக்கங்களினதும் உயரம் மீற்றர்களில் (மீ) பின்வருவனவற்றிற்குக் குறைவாக இருத்தல் ஆகாது* |
|---|---|
| *25 மீ அத்துடன் அதற்கு மேல்* | *1.0 மீ* |
| *20 மீ அத்துடன் அதற்கு மேல் ஆனால் 25 மீ இற்கு குறைவு* | *0.8 மீ* |
| *15 மீ அத்துடன் அதற்கு மேல் ஆனால் 20 மீ இற்கு குறைவு* | *0.6 மீ* |
| *12 மீ அத்துடன் அதற்கு மேல் ஆனால் 15 மீ இற்கு குறைவு* | *0.4 மீ* |
| *5 மீ அத்துடன் அதற்கு மேல் ஆனால் 12 மீ இற்கு குறைவு* | *0.3 மீ* |
| *5 மீ இற்கு கீழ்* | *0.1 மீ.".* |

*1- 36*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.